**தலைப்பு 212 – பரீட்சைத் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுகள்.

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்.

பரீட்சைத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பரீட்சைத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுகள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 29 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடார்ந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 14 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கபடுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தை தவிர, 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 இலக்கமுடைய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் பரீட்சைத் திணைக்களத்தின் நிதி நிலைமை, மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமானதுமான பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்று தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்படுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுகள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்.

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கும் இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுகளைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்திரனதும் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக்கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள், மற்றும் பொறுப்புகள் தொடர்பான முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கப்பூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கப்பூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு.

ஓட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாக கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னனியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகள் கட்டுபாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) மற்றும் 38 பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு. | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் மற்றும் திறைச்சேரியின் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களத்தின் சொத்து பெறுமதி இடையில் ரூபா 2,924,239,024 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | ஆண்டு இறுதியில் திறைச்சேரியின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து பெறுமதி திணைக்களத்தின் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து பெறுமதியுடன் இணங்குகின்றமை உறுதிப்படுத்தப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது எனவும் எதிர்காலத்தில் திருத்தப்படும் எனவும். |

### 1.6.2 சட்ட விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வுகளின் போது அவதானிக்கப்பட்ட சட்ட விதிகள், பிரமாணங்கள், ஏற்பாடுகளுக்கு இணங்காது காணப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்படுகின்றது.

## அவதானிப்பு

------------

| | சட்ட விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை. | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
| --- | --- | --- | --- | --- |
| | -------------------------- | --------------------- | ---------------- | ----------------------------- |
| **(அ)** | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணத்தின் 396 (ஈ) நிதி பிரமாணம் | வெளியிடப்பட்டப்போதிலும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்கள் மிகைத்துள்ள ரூபா 256,153 பெறுமதியுடைய 80 காசோலைகள் தொடர்பாக நிதி பிரமாணம் 396(ஈ) நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது எனவும் திருத்துவதற்கு குறித்துக் கொள்ளப்படுகின்றது எனவும். |
| (ஆ) | அரசின் பெறுகை வழிக்காட்டிக் கோவை<br>------------------------- | | | |
| | (i) 2.8.2 ஆம் பிரிவு | வழிக்காட்டிக்கு முரணாக டனர் கீ அச்சுப் இயந்திரம் கொள்வனவு செய்வதன் பெறுகைக்கு தொடர்புடைய தொழிநுட்ப மதிப்பட்டுக் குழுவின் 05 அங்கத்தவர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. | பெறுகை வழிக்காட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த இயந்திரம் கொள்வனவு செயவதன் தேவைப்பாடு திணைக்களத்திற்குரியது என்பதனால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர்கள் பரிந்துரை செய்யப்பட்டு அனுப்பப்பட்டது என |

| | | | |
|---|---|---|---|
| (ii) 8.9.3 ஆம் பிரிவு | ரூபா 500 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்த உடன்படிக்கை வரிசை அமைச்சின் செயலாளரினால் கையொப்பமிடப்படல் வேண்டும். எனினும், ரூபா 546,264,452 ஆன டனர் கீ அச்சு இயந்திரம் கொள்வனவு செய்தலுக்கான ஒப்பந்தம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கையொப்பம் இடப்பட்டிருந்தது. | பெறுகை வழிக்காட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது எனவும், அமைச்சின் செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது எனவும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 செலவுகள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை.** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| தேவை சரியாக அடையாளப்படுத்தப்பட்டு குறித்த திட்டத்தின் பிரகாரம் வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்படாமையினால் 11 செலவு விடயங்கள் 15 சதவீதம் தொடக்கம் 77 சதவீதம் வரை வீதத்தில் ரூபா 360,701,420 ஆன நிதிஏற்பாடு எஞ்சியிருந்தது. | நிதி பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீட்டினை தயாரித்தல் வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என. |

## 2.2 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

இது தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை.** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) வேலை நிறுத்தத்திற்கு உட்பட்டிருந்த இரு உத்தியோகத்தர்களிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய 5 வருடங்கள் மிகைத்த ரூபா | தாபனக் கோவையின் xxiv ஆன அத்தியாயத்தின் 4 ஆவது பிரிவில் | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது எனவும் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும். |

| | | |
|---|---|---|
| 473,367 ஆன கடன் மீதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை பின்பற்றல் வேண்டும். | |
| (ஆ) 1995 இலிருந்து 2008 வரையான காலப்பகுதிக்குள் சேவையை விட்டுச்சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 113,351 ஆன கடன் மீதி மீளாய்வாண்டினுள் தீர்க்கப்படுவதற்கு தவறியிருந்தது. | தாபனக் கோவையின் xxiv ஆன அத்தியாயத்தின் 4 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை பின்பற்றல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது எனவும் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------

### 3.1 திட்டமிடல்

---------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை.** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் பெறுகை திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 1990 ஆண்டிற்கு முன்னர் வெளியிடப்பட்ட க.பொ.த. சாதாரண தர பரிட்சை மற்றும் க.பொ.த உயர்தர பரிட்சை சான்றிதழ் ஸ்கேன் செய்தல் 2020 சனவரி 31 திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பெறுபேறு பதிவேடு ஸ்கேன் செய்தல் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது என. |

### 3.2 நோக்கத்திறற்கு முரணான செயற்பாடுகள்

------------------------------------------------------------------------

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை.** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) 1976 இன் 17 ஆம் இலக்கமுடைய சட்டத்தின் திருத்தப்பட்ட 1968 இன் 25 ஆம் இலக்கமுடைய பிரசித்தமான பரீட்சை சட்டத்தில் தேசிய மற்றும் சர்வதேச பரீட்சைகள் | பரீட்சைகள் நடத்துவதை நிறுத்துவதனை விட இந்த பரீட்சை ஒழுங்கமைத்தல் மற்றும் நடத்துவதற்காக | பரீட்சை திணைக்களம் ஆரம்பத்திலிருந்தே தனிப்பட்ட மற்றும் சர்வதேச பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளதுடன் அந்த முன்மாதிரியை பின்பற்றி இதுவரை |

| | | |
|---|---|---|
| ஒழுங்குப்படுத்துவதற்காக நிதிஏற்பாடுகள் இல்லாதிருப்பினும் திணைக்களம் ஆரம்பத்திலிருந்தே தேசிய மற்றும் சர்வதேச தனிப்பட்ட பரீட்சைகள் ஒழுங்குப்படுத்தல் மற்றும் நடத்துவதன் முன்மாதிரியை பின்பற்றி வருடாந்தம் அப் பரீட்சை ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டிருந்தது. | தேவையான சட்டரீதியான ஏற்பாடுகளை உருவாக்குதல் பொருத்தமானது என. | அப் பரீட்சை ஒழுங்குபடுத்தி நடத்தப்பட்டுள்ளது எனவும், அவ்வாறு நடத்துவதற்கு சட்ட ரீதியான ஏற்பாடுகள் இல்லாதிருப்பின் இதற்கு பின்னர் அந்த பரீட்சை நடத்துவதனை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் |
| (ஆ) திணைக்களம் வருடாந்தம் நடத்துகின்ற தேசிய மற்றும் சர்வதேச தனிப்பட்ட பரீட்சை ஒழுங்குப்படுத்தல் தொடக்கம் பெறுபேறுகள் வெளியிடும் பணிக்காக தனிப்பட்ட நிறுவனங்கள் மற்றும் திணைக்களத்தின் இடையில் ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்காக தனிப்பட்ட நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் உருவாக்கப்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கு முன் ஆண்டுகளில் திணைக்களத்தினால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற அப் பரீட்சைகளுக்காக தனிப்பட்ட நிறுவனங்கள் மற்றும் திணைக்களம் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேலைத்திட்டம் செயற்படுத்தப்டிருக்கவில்லை எனவும் தற்போது பரீட்சை தொடர்பாக ஒப்பந்தம் உருவாக்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும். |
| (இ) தனிப்பட்ட மற்றும் சர்வதேச பரீட்சை நடத்துவதற்காக 2017,2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்காக ரூபா 7,305,345 அரசினால் ஏற்கப்பட்டிருப்பினும் அப் பணம் தனிப்பட்ட நிறுவனங்களினால் மீள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | தனிப்பட்ட மற்றும் சர்வதேச பரீட்சைகளுக்காக ஏற்கப்படும் செலவுகள் முறையாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது எனவும் தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு தேவையான ஆலோசனைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது எனவும். |

## 3.3 பெறுகைகள்

---------------

வினாத்தாள்கள் அச்சுக்காக டிஜிட்டல் டனர் கீ அச்சு இயந்திரமொன்று கொள்வனவு செய்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டில் ரூபா 546,264,402 பெறுமதியுடைய இந்த இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு முன்னர் அதன் பொருந்தக்கூடிய தன்மை மற்றும் இயந்திரத்தினை பராமரிப்பதற்குரிய திணைக்களத்தின் திறன் தொடர்பான சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அதிக விற்றுமுதல் கொண்ட இவ்வாறான இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்கு முன்னர் அதன் பொருந்தக்கூடிய தன்மை தொடர்பான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். | திணைக்களத்தில் காணப்படுகின்ற பழைய அச்சு இயந்திரம் வினாத்தாள்கள் அச்சுக்காக பயன்படுத்தப்படுகின்றமை காரணத்தினால் உருவாகியுள்ள சிரமங்களை குறிப்பிட்டு புதிய இயந்திரமொன்று கொள்வனவு செய்வதன் தேவைப்பாடு உறுதி செய்யப்பட்டு சாத்தியக்கூறு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது என. |
| (ஆ) அச்சு இயந்திரத்தின் மணித்தியாலத்திற்கான திறன் 4000 புத்தகங்கள் ஆகும். எனினும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையாக 135,500 மற்றும் 383,750 புத்தகங்கள் மட்டுமே அச்சிடப்பட்டிருந்தது. அவ்வாறே A3 , A4 வினாத்தாள்கள் அச்சிடலின் மணித்தியாலத்திற்கான திறன் 13,000 வினாத்தாள்கள் ஆகும். எனினும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் A3 , A4 வினாத்தாள்கள் 160,500 மற்றும் 212,000 ஆக அச்சிடப்பட்டிருந்தது. அதன்பிரகாரம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் புத்தகங்கள் | இயந்திரத்தின் திறன் வினைத்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும். | இயந்திரத்தின் விற்றுமுதல் பிரகாரம் பொருத்தமான தாள் தேசிய ரீதியில் பெற்றுக்கொள்வதற்கு முடியாமையினால் தாள்கள் இறக்குமதி செய்வதற்கு நேரிட்டமையும் இறக்குமதியின் போது ஏற்பட்ட சிரமங்களினால் தாள்கள் பெற்றுக் கொள்ளல் தாமதமாகியது எனவும் அக் காரணத்தினால் பயன்பாடு தாமதமாகியது எனவும். |

| | | |
|---|---|---|
| அச்சிடுவதற்காக மற்றும் A3 , A4 வினாத்தாள்கள் அச்சிடுவதற்காக பயன்படுத்திய காலம் முறையாக 34 மற்றும் 96 மற்றும் 12 மற்றும் 16 மணித்தியாலங்கள் ஆக காணப்பட்டது. | | |
| (இ) ஒரு வருடம் ஆன சிறிய காலத்தில் கடமைக் காலம் நிறைவடையும் விதத்தில் வினாத்தாள்கள் அச்சிடுவதற்காக 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு இருந்த மேற்கூறப்பட்ட அச்சு இயந்திரத்திலிருந்து 2019 ஆம் ஆண்டிற்கான க.பொ.த சாதாரண தர வினாத்தாள்களில் 08 சதவீதம் மட்டும் அச்சிடப்பட்டிருந்ததுடன் திணைக்களத்தின் பழைய 08 இயந்திரங்களினால் க.பொ.த உயர் தர மற்றும் புலமைப்பரிசில் வினாத்தாள்களில் 100 சதவீதமும், சாதாரண தர வினாத்தாள்களில் 92 சதவீதமும் அச்சிடப்பட்டிருந்தது. அக் காரணத்தினால் 2019 ஆம் ஆண்டில் இயந்திரத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 26,208,600 பெறுமதியுடைய மூலப் பொருட்களில் ரூபா 22,217,630 பெறுமதியுடைய மூலப் பொருட்கள் பயன்படுத்தப்படாமல் எஞ்சியிருந்தது. | இயந்திரத்தின் திறன் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டியதுடன் பயன்படுத்தப்பட்ட திறனின் பிரகாரம் மூலப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கும் தேவையான அளவில் மட்டும் மூலப் பொருட்கள் வைத்துக் கொள்ளவதையும் கருத்திற் கொள்ளல் வேண்டும். | 8 சதவீதத்திற்கு கிட்டிய அளவு அச்சிடப்பட்டுள்ளது எனவும் எதிர்பார்க்கப்பட்ட தொகை அச்சிடப்படாததன் காரணத்தினால் முன்கணிக்கப்பட்ட மூலப் பொருட்களின் அளவு பயன்பாட்டிற்கு எடுக்கப்படவில்லை எனவும் எஞ்சிய அச்சிடல் நடவடிக்கைகளுக்காக அப் மூலப் பொருட்கள் பயன்படுத்தப்படும் எனவும். |
| (ஈ) இயந்திரத்தின் உயர் திறன் பயன்படுத்தப்படாமல் வருடாந்தம் பராமரிப்பு மற்றும் மென்பொருள் பத்திர கட்டணமாக ரூபா 9,660,000 திணைக்களத்தினால் ஏற்க்கப்பட்டிருந்தது. | இயந்திரத்தின் உயர் திறன் வினைத்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும். | ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்த பணம் செலுத்தப்படல் வேண்டுமெனவும் வருங்காலத்தில் வழங்குனரினால் பயிற்சி பெற்றுக் கொடுக்கப்பட்டதன் பின்னர் நிரந்தர பணி |

| | | |
|---|---|---|
| | | நிலையினருடன் இணைந்து பிரதான பரீட்சைக்காக மட்டும் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என |
| (உ) விவரக்குறிப்பு இலக்கம் 9 (ஈ) பிரிவு மற்றும் வழங்குனரின் ஏல ஆவணங்களின் பிரகாரம் வழங்குனர்களின் செலவில் 04 உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு பயிற்சியொன்று பெற்றுக் கொடுக்கவேண்டியிருப்பினும் இயந்திரம் பொருத்தப்பட்டு ஒரு வருடம் கடந்திருப்பினும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஒப்புதல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் இப் பயிற்சி வேலைத் திட்டங்கள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. |
| (ஊ)தொழிநுட்ப ஆய்வு குழுவின் உத்தியோகத்தர்களினால் சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக அவதானிப்புக்களின் பின்னர் முன்வைக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் டனர் கீ இயந்திரத்தின் Wrapping Solution பகுதி வினாத்தாள்களின் இரகசியத் தன்மையை பாதுகாப்பதற்காக திணைக்களத்திற்கு அத்தியாவசிய அங்கமாக அடையாளப்படுத்தி பரிந்துரை செய்யப்பட்டிருப்பினும் கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து ரூபா 8,428,637 பெறுமதியான இந்த பகுதி எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்காமல் செயலற்று காணப்பட்டது. | திணைக்களத்தின் தேவைக்கு பொருந்தக்கூடிய வகையில் இந்த இயந்திர பகுதி மேம்படுத்தப்பட்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த பகுதி தற்போது பயன்படுத்தப்படாதது எனவும் திணைக்களத்தின் தேவைக்கு ஏற்ப இந்த பகுதி தயாரிக்கப்படுவதற்கு தொடர்படைய நிறுவனத்துடன் கலந்துரையாடப்படும் எனவும். |

## 3.4 முகாமைத்துவ செயற்றிறனின்மை

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2009 திசெம்பர் 16 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்த இ - அரச கொள்கை 2010 மே 31 ஆம் திகதிய SP/SB/03/10 இலக்கமுடைய சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் ஊடாக அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் உள்ளடங்கலாக அரச நிறுவனங்கள் பின்பற்ற வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், திணைக்களத்தினால் வலையமைப்பு உருவாக்கம், நிகழ்நிலை முறையில் சான்றிதழ்கள் வெளியிடல் மற்றும் பெறுபேறுகளை சான்றுப்படுத்தல் உட்பட இ- சேவைகள் மேற்கொள்ளும் போது இ - அரச கொள்கையின் பிரகாரம் தகவல்கள் அமைப்பிற்கு உட்செலுத்துவுவதற்கு முன்னர் அடையாளப்படுத்தப்படா ஒப்பந்தங்களுக்கு நுழைதல், அனைத்து பணிநிலையினருக்கும் பயிற்சிகளை வழங்குதல், தொழிநுட்பம் பயன்படுத்துவதில் கொள்கையொன்றை உருவாக்குதல், குறித்த வலைப்பக்க முகவரியை திருத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தகவல்கள் தொடர்பாக வழங்குனர்கள் நம்பிக்கை உடையும் விதத்தில் செயற்படும் சந்தர்ப்பங்களில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு முடியுமான விதத்தில் அடையாளப்படுத்தப்படாமையின் ஒப்பந்தமொன்றிற்கு உடன்படல் வேண்டும். அவ்வாறே இ - அரச கொள்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வழங்குனர் கிளையினூடாக புதிய ஒப்பந்தம் கைச்சாத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என மற்றும் வழங்குனர் நிறுவனம் இது வரையில் நம்பிக்கை உடையும் வகையிலான நடவடிக்கையில் ஈடுபட்டில்லை. எதிர்காத்தில் திணைக்களத்தில் தொழிநுட்பம் பயன்பாடு தொடர்பான கொள்கையொன்று தயாரிக்கப்படும் எனவும் திணைக்களத்தின் வலைய பெயர் முதல் பதிவின் போது இ - அரச கொள்கை வெளியிடப்படவில்லை எனவும், அச் சந்தர்ப்பத்தில் www.doenets.lk என்ற வலைத்தள பெயர் பெறப்பட்டுள்ளது எனவும் இது தொடர்பாக ஆலோசனை தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது எனவும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நிறுவனத்திற்கான பரீட்சைக்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளும் விதம் தொடர்பாக குறித்த முறைமையொன்று திணைக்களத்தினால் தீர்மாணிக்கப்பட்டிராமையினால் திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களினால் அறவிடப்பட வேண்டிய ரூபா 27,388,031 ஆன பணம் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அறவிடப்பட தவறியிருந்தது. | நிறுவனத்திற்கான பரீட்சைக்காக நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யும் விதம் தொடர்பில் குறித்த முறைமையொன்று தீர்மாணிக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது எனவும் தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு தேவையான ஆலோசனைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது எனவும். |
| (இ) நிறுவனததிற்குறிய பரீட்சைக்காக வினாத்தாள்கள் தயாரித்தல் மற்றும் விடைத்தாள்கள் பரீட்சிக்கும் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யும் அடிப்படை அவ் உத்தியோகத்தர்களுக்கு இருக்க வேண்டிய கல்வித் தகைமைகள், தொழில் மட்டம் மற்றும் அனுபவம் காண்பிக்கப்படும் எழுத்துமூல அளவுக்கோள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வெவ்வேறு காலப்பகுதிகளில் மாறுப்படாத விதத்தில் எழுத்துமூல குறித்த அளவுகோள்கள் தயாரிக்கப்படல் வேண்டும். | வள நபர்களாக தெரிவுசெய்யப்படுவது நீண்ட காலமாக நம்பிக்கையாக செயற்பட்டுள்ள விடய நிபுணர்களாவதுடன் வள நபர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொடுக்கப்படுனின்ற அங்கீகாரத்துடன் இந்த நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுவர் என. |
| (ஈ) விண்ணப்பதாரிகள் எண்ணிக்கை 2000 இற்கு அதிகமான பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியிடப்படுவதற்காக கணினி மற்றும் பெறுபேறு என்ற இரண்டு கிளைகளும் தொடர்புப்படுத்தப்பட்டு புள்ளி மாற்றங்கள் சமநிலை படுத்தப்படும் என்றாலும் 2000 இற்கு குறைந்த விண்ணப்பதாரிகள் காணப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியிடப்படுவதற்காக அவ்வாறான இரட்டை பரிசோதனை முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | 2000 இற்கு குறைந்த விண்ணப்பதாரிகள் காணப்படும் பரீட்சைக்கும் கணினி மற்றம் பெறுபேறு ஆன கிளைகள் இரண்டும் தொடர்புப்படுத்தி இரட்டை பரிசோதனை முறைமையின் பிரகாரம் பெறுபேறு வெளியிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அனைத்து பெறுபேறு பதிவேடுகளும் பெறுபேறுகள் கிளையின் உத்தியோகத்தர்களினால் முழு பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என. |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்குவிதி கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக 08 உத்தியோகத்தர்கள் 18 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் திணைக்களத்தில் கடமையாற்றியிருந்தனர். | திணைக்களத்திற்கு பொருத்தமான இடமாற்ற கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரித்துக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது என. |